பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 01 2025 **THURSDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. புதிய குற்றவியல் சட்டங்கள், விரைந்து நீதி கிடைக்க வகை செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 5-ஆம்தேதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

3. சத்தீஸ்கரில் 29 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

4. அமெரிக்காவின் வாஷிங்டன் **DC** பகுதியில், விமான விபத்தில் உயிரிழந்த 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்றவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெறுகிறது.

5. புரோ லீக் ஆடவர் ஹாக்கிப்போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மூன்றாண்டுகளுக்குள் நீதி கிடைப்பதற்கு வழி ஏற்படுத்தித் தந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து ஆய்வு செய்த உள்துறை அமைச்சர், மாநிலத்தின் அனைத்து காவல்துறை ஆணையகங்களிலும் புதிய குற்றவியல் சட்டங்களை வரும் ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதிக்குள் நடைமுறைக்கு கொண்டுவர மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநிலத்தில் மாவட்ட காவல்துறை தலைமையகங்களிலும் இதனை விரைந்து கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்து மாநில முதலமைச்சர் மாதம் ஒருமுறையும், மாநில உள்துறை அமைச்சர் 15 நாட்களுக்கு ஒருமுறையும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மாநில தலைமைச்செயலர், உள்துறை கூடுதல் தலைமைச்செயலர், மாநில காவல்துறை தலைவர் ஆகியோர் ஒவ்வொரு வாரமும் குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

மாநில உள்துறை மற்றும் சுகாதாரத்துறைகள் பிரேத பரிசோதனை அறிக்கைகள் மற்றும் மருத்துவ அறிக்கைகளை உடனடியாக கணினி வழியாக அனுப்புவதற்கான ஒழுங்குமுறையை கொண்டுவர வேண்டும்

என்றும், மாநில காவல்துறை தலைவர் குற்றவியல் வழக்குகளை கூர்ந்து கவனித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அனைத்து காவல்நிலையங்களிலும், இணையதள சேவையை 30 **mbps** அளவுக்கு தரம் உயர்த்தித்தர வேண்டும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 5-ஆம்தேதி நடைபெறவுள்ள நிலையில், 70 சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.

கட்சிகளின் தலைவர்கள் பேரணியாக சென்றும், பொதுக்கூட்டங்களில் உரையாற்றியும் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, ரோஹினி மற்றும் **Wazirpur** பகுதிகளில் வாக்கு சேகரித்தார்.

அப்போது உரையாற்றிய அவர், தங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால், குடும்ப தலைவிகளுக்கு மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

கருவுற்ற தாய்மார்களுக்கு 21 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், அவர்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 500 ரூபாய்க்கு வழங்கப்படும் என்றும் கூறினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, **Badli** பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், யமுனை ஆற்றில் மாசு ஏற்பட காரணமாக இருந்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

மதுபான ஊழல் வழக்கில் ஆம் ஆத்மி கட்சியினருக்கு தொடர்பு உள்ளதாகவும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், தமது கட்சியை தோற்கடிப்பதற்காக பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் இணைந்து செயல்படுவதாக கூறினார்.

காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் தங்களது தலைவர்களின் தவறான செயல்பாடுகளை கருத்தில்கொண்டு அவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தில்லி முதலமைச்சரும், ஆத் ஆத்மி கட்சி வேட்பாளருமான திருமதி ஆதிஷி, அம்ரித்பூரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கையில், தங்களது கட்சி ஆட்சியின்போது இலவச மின்சாரம் மற்றும் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

சத்தீஸ்கர் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் 29 மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மத்திய ரிசர்வ் காவல்படையினரிடம் சரணடைந்துள்ளனர். இவர்களில் ஏழு பேர் பெண்கள்.

பல்வேறு குற்றச்சம்பவங்களில் ஈடுபட்டதாக இவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு பிரபாத் குமார், மாநில அரசின் கொள்கையின்படி, சரணடைந்த மாவோயிஸ்டுகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் மறுவாழ்வு உதவித்தொகையாக வழங்கப்படும் என்றும் கூறினார்.

<<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளா விழாவில் அடுத்த மாதம் 3-ஆம் தேதி வசந்த பஞ்சமி தினத்தையொட்டி, புனித நீராடும் பக்தர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உத்தரப்பிரதேச அரசு மேற்கொண்டுள்ளது.

வரும் 4-ஆம் தேதிவரை மகா கும்பமேளா நடைபெறும் பகுதிகளில் வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநில தலைமைச்செயலர் திரு மனோஜ் குமார் சிங், மாநில காவல்துறை தலைவர் திரு பிரசாந்த் குமார் ஆகியோர் பிரயாக்ராஜில் பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்டனர்.

கும்பமேளா சிறப்பு அதிகாரி திரு விஜய் கிரண் ஆனந்த், காவல்துறை தலைமை இயக்குனர் திரு வைபவ் கிருஷ்ணா ஆகியோரும் உடனிருந்தனர்.

பிரயாக்ராஜுக்கு அடுத்த மாதம் 4-ஆம் தேதிவரை அனைத்து சிறப்பு பேருந்து போக்குவரத்துக்கு ஒடிஸா மாநில அரசு தடை விதித்துள்ளது

ஏந்தவொரு அசம்பாவிதம் நடைபெறா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓடிஸா மாநில போக்குவரத்துக்கழகத்தில் எட்டு பேருந்துகள் மட்டும் பிரகாய்ராஜுக்கு இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நேற்று நேரிட்ட விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை, ஸ்வருப் ராணி நேரு மருத்துவமனையில் காவல்துறை தலைவர் திரு பிரசாந்த் குமார் மற்றும் மாநில தலைமைச்செயலர் திரு மனோஜ் குமார் சிங் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>

அமெரிக்காவின் வாஷிங்டன் **DC** பகுதியில், அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானமும், பாதுகாப்புப்படை ஹெலிகாப்டரும் மோதிய விபத்தில், உயிரிழந்த 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஏர்லைன்ஸ் விமானத்தில் 60 பயணிகளும், நான்கு பணியாளர்களும், இருந்தனர்.

ஹெலிகாப்டரில் மூன்று ரா ணுவ வீரர்கள் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானமும், ஹெலிகாப்டரும் லேசாக மோதியவுடன் வாஷிங்டனில் உள்ள **Potomac** ஆற்றில் விழுந்ததால், இந்த விபத்தில் அனைவரும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பயணிகளின் குடும்பத்தினரை பத்திரமாக அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

300-க்கும் மேற்பட்டோர் ஆற்றுப்பகுதியில் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>

காஸா போரின்போது சிறைபிடிக்கப்பட்ட எட்டு பேர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூன்று பேர் இஸ்ரேல் நாட்டையும், ஐந்து பேர் தாய்லாந்தையும் சேர்ந்தவர்கள்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீன குழுக்களுக்கும் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, மூன்றாவது கட்டமாக இந்த எட்டுபேரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தெற்கு காஸாவின் **Khan Younis** பகுதியில் பிணையாக பிடித்து வைத்த இஸ்ரேலிய நாட்டவரை விடுவித்ததற்கு இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

அதிக அளவு மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதால் அவர்களை பத்திரமாக அழைத்து வருவதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

இந்நிலையில், சிறைபிடிக்கப்பட்டுள்ள 110 பாலஸ்தீனியர்களை இஸ்ரேலிய அதிகாரிகள் இன்று விடுவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

புரோ லீக் ஆடவர் ஹாக்கிப்போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்த அணியில், 31 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி புவனேஷ்வரில் அடுத்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கி, 25-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

-----------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-15, என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **Jason Gunawan**–ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் சங்கர் சுப்பிரமணியன் 9-21, 21-10, 21-17 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Chico Dwi Wardoyo**-வை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ரக்ஷிதா சந்தோஷ் ராம்ராஜ் 21-15, 21-12 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் **Tung**-ஐ வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Sai Pratheek - Pruthvi Roy** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

தேசிய விளையாட்டுப்போட்டியில் தமிழகத்தின் நர்மதா ராஜு தங்கப்பதக்கம் வென்றார்.

உத்தராகண்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் பத்து மீட்டர் மகளிர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

-----------------

தூத்துக்குடியில் நடைபெற்ற தென்மண்டல அளவிலான தீயணைப்புத்துறை வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை நெல்லை மற்றும் தென்காசி மாவட்ட அணிகள் வென்றன.

**<<<<<<<END>>>>>**